செய்தி வெளியீடு எண்.407/2010 நாள்: 7.6.2010

வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை கோடைவிழா அடுத்த ஆண்டு தாவரவியல் பூங்காவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்- மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., பேச்சு

வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை கோடைவிழா நிறைவு விழாவில் கலை நிகழ்ச்சிகள், நாய்கண்காட்சி, கொழு,கொழு குழந்தைகள் போட்டி, படகு போட்டி, சிறந்த அரசுத்துறை அரங்குகளுக்கு பரிசுகள், பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி தலைமையுரையாற்றுகையில்: ஏலகிரி ஏழைகளின் ஊட்டி. எல்லா மதத்தினரும் வந்து செல்லக்கூடிய அமைதியான இடமாக திகழ்கிறது. ஊட்டி, கொடைக்கானல், போ்னற இடங்களுக்கு பணக்காரா்கள்தான் செல்கின்றனா். ஆனால் ஏலகிரி மலைக்கு ஏழைகளும் வருகின்றனர். இங்கே உள்ள தனியார் ஓட்டல்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று கூறுகின்றார்கள். எனவே மிக குறைநத கட்டணத்தில் ஏழைகள் தங்கிச் செல்ல வேண்டும் என்பது அரசின் குறிக்கோள். அதன்படி நூறு ரூபாய் செலவில் ஒரு நாள் முழுவதும் தங்கிச் செல்லும் வகையில் ரூ 40 லட்சம் மதிப்பில் விடுதிகள் கட்டப்படும்.

மேலும் 90 ஏக்கர் நிலப்பரப்பில் பொட்டானிக்கல் கார்டன் ரூ 23 கோடி செலவில் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதற்கான பணிகள் இப்பொழுது தொடங்கியுள்ளது. அடுத்த ஆண்டு கோடைவிழா அங்குதான் நடத்தப்படும் என்று கூறினார்.

வேலூர் எம்.பி. திரு.அப்துல்ரகுமான் சிறப்புரையாற்றினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.நா.அருள்ஜோதிஅரசன், மண்டல வன பாதுகாவலர் திரு.அ.வ.வெங்கடாசலம் முன்னிலையுரையாற்றினார்கள்.ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திரு.ஆர்.கிருபாகரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.சி.மணி (எ) குட்டிமணி, ஏலகிரி மலை ஊராட்சி மன்ற தலைவர் திர.கே.கோவிந்தசாமி, ஏலகிரி ஓட்டல் உரிமையாளர் சங்கம், திரு.என்.சிவலிங்கம் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எ.சரவணவேல்ராஜ், திருப்பத்தூர் சார் ஆட்சியர் திரு.க.நந்தகுமார், மகளிர் திட்ட மேம்பாட்டு அலுவலர் திரு.பிச்சைக்கண்ணு, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைத்து துறை அலுவலர்கள் திரளாக பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

அங்கன்வாடி பணியாளர்கள், உதவியாளர்களுக்கு சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) திரு.ஆர்.ராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார் நன்றி கூறினார்.

கலைநிகழ்ச்சிகளுடன் ஒயிலாட்டம், சின்னத்திரை புகழ் கலைஞர்களின் கலக்கறாங்க! அசத்தறாங்க! பல்சுவை நிகழ்ச்சி, பெங்களூர் கார்டன் சிட்டி கல்லூர் மாணவர்களின் ஆடை அலங்கார அணி வகுப்பு, வாணவேடிக்கை ஆகியவை நடைபெற்றது.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9